## சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.

## அ.வ எண் 130/2021

| | |
|---|---|
| பெயர் | .. குணசேகரன்(வாசா3) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு ஜனவரி மாதம் 08 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் அருணா ரூபாவதி அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

08.01.2025

**முதல் விசாரணை:**

எனது பெயர் குணசேகரன். நான் மேற்படி முகவரியில் குடியிருக்கிறேன். நான் விளாத்திகுளம் வட்டம் , மந்திகுளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வரப்பெற்ற அழைப்பணையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்.312/4 ஏ, 312/4 பி ஆகிய சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சன்னாசி மகன் வேல்ச்சாமி அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி நிலங்கள் 15 ஆண்டுகளாக யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்ற விவரத்தை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அதன்படி சன்னாசி மகன் வேல்ச்சாமி என்பவர்தான் அனுபவம் செய்து வருகிறார். மேற்படி நிலங்களில் தற்சமயம் மிளகாய், உள்ளி, கம்பு பயிரிடப்பட்டுள்ளது. மேற்படி 2 சர்வே எண்களில் கண்ட நிலங்கள் ஒன்றுபோல் அடுத்து அடுத்து உள்ளது. சர்வே எ.ணஒ 312/4 ஏ சன்னாசி மகன் வேல்ச்சாமி மற்றும் 3 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது.

சர்வே எ.ணஒ 312/4 பி சன்னாசி மகன் வேல்ச்சாமி மற்றும் 3 நபர்கள் பெயரில் பட்டா உள்ளது. அந்த 3 நபர்கள் பெயர் ஆண்டி மகன் குமரையா , ஆண்டி மகன் முத்துராமலிங்கம், ஆண்டி மகள் சண்முகத்தாய் ஆகும். மேற்படி சர்வே எண்களில் கண்ட நிலங்களில் 4 மால் விவரம் வடக்கில் வெள்ளைச்சாமி மகன் வெற்றிவேல், கருப்பசாமி மனைவி சண்முகத்தாய் அம்மாள் நிலம் உள்ளது. தெற்கில் விரிசம்பட்டி கிராம எல்லைக்கு உட்பட்ட சொத்துக்கள் உள்ளன.கிழக்கில் குமராண்டி நாடார் மகன் கருப்பசாமி நிலமும், மேற்கில் முருகவேல் மனைவி மாரியம்மாள், குமராண்டி நாடார் மகன் கருப்பசாமி, மற்றும் பொன்னுச்சாமி நாடார் மகன் சண்முகம் வகையறா நிலமும் உள்ளது.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

சர்வே எண். 312/4 ஏ, 312/4 பி ஆகிய நிலங்களுக்கு வேல்ச்சாமி என்பவர் பெயருடன் சேர்த்து 3 நபர்கள் பெயர் ஆண்டி மகன் குமரையா , ஆண்டி மகன் முத்துராமலிங்கம், ஆண்டி மகள் சண்முகத்தாய் என கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி நிலங்களுக்கு கூட்டுபட்டா உள்ள நிலையில் வேல்ச்சாமி மட்டுமே அனுபவம் செய்துவருவதாக நான் கூறமுடியாது என்றால் சரிதான். ஆனால் நடப்பு தேதியில் வேல்ச்சாமி மட்டும் அனுபவம் செய்துவருகிறார். அவ்வாறு வேல்ச்சாமி மட்டுமே அந்த நிலங்களை அனுபவம் செய்து வருகிறார் என்பதற்கு நான் யார்யாரை விசாரித்தேன் என்றால் நான் அவ்வாறு யாரையும் விசாரிக்கவில்லை.ஒரு நிலத்தில் பயிரை பார்த்தவுடன் அது யாரால் பயிர் செய்யப்படுகிறது என குறிப்பிடமுடியாது என்றால் சரிதான். மேற்படி 2 சர்வே எண்களுக்குரிய புலவரைபட சுவடி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண். 312/4 ஏ, 312/4 பி ஆகிய நிலங்களுக்கு வேல்ச்சாமி என்பவர் பெயருடன் சேர்த்து 3 நபர்கள் பெயர் ஆண்டி மகன் குமரையா , ஆண்டி மகன் முத்துராமலிங்கம், ஆண்டி மகள் சண்முகத்தாய் என உள்ள நிலையில் வேல்ச்சாமி தவிர இதர 3 நபர்கள்தான் அந்த நிலங்களை பயிர் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் ஸ்தலத்தில் சென்று விசாரணை செய்யாமல் வேல்ச்சாமிதான் சாகுபடி செய்துவருகிறார் என அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஸ்தலத்திற்கு சென்று புகைப்படம் ஏதாவது எடுத்தேனா என்றால் இல்லை. நான் எந்ததேதியில் மேற்படி ஸ்தலத்திற்கு சென்றேன் என்ற விவரத்தை எனது முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.